This Question Paper consists of **45** questions **12** printed pages

**12** பக்கங்களைக் கொண்ட இவ்வினாத்தாளில் **45** வினாக்கள் உள்ளன.

| **Roll No.** (ரோல் நம்பர்) | | | | | | | | | | | | | **Code No. 71/SS/A** (கோட் நம்பர்) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

**SET**/ செட் **A**

# TAMIL

# தமிழ்

## (304)

**Day and Date of Examination**

(தேர்வு நடைபெறும் நாள் மற்றும் தேதி) ____________________

**Signature of Invigilators :** 1. ____________________

(தேர்வு மேற்பார்வையாளர்

கையொப்பம்) 2. ____________________

UNNATI EDUCATIONS
EK KADAM UNNATI KI AUR

**பொதுக் குறிப்புகள் :**

1. தேர்வு எழுதுவோர் தங்களின் வரிசை எண்ணை (Roll No.) வினாத்தாளின் முன்பக்கம் எழுத வேண்டும்.
2. வினாத்தாளில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களின் எண்ணிக்கையும், வினாத்தாளின் முன்பக்கம் அச்சாகியுள்ள வினாக்களின் எண்ணிக்கையும், மொத்த பக்கங்களின் எண்ணிக்கையும் சரியாக உள்ளனவா என்பதையும், அனைத்து வினாக்களும் வரிசையாக உள்ளனவா என்பதையும் சரிபார்க்கவும்.
3. வினாத்தாளில் ஏதேனும் அடையாளக் குறிகள் இட்டாலோ அல்லது தேர்வு எழுதுபவர் தனது எண்ணை அதற்கென ஒதுக்கப்படாத இடத்தில் எழுதினாலோ தேர்வு எழுதுபவர் தேர்வு எழுதும் தகுதியை இழக்க நேரிடும்.
4. உங்களது வினாத்தாளின் எண் **71/SS/A** மற்றும் செட் A எண்ணை விடைத்தாளில் எழுதுங்கள்.



**UNNATI EDUCATIONS**
**9899436384: 9654-279-279**

# தமிழ்

# (304)

**காலம் : 3 மணி** **[ மொத்த மதிப்பெண்கள் : 100**

**குறிப்பு :**

1. அனைத்து கேள்விகளுக்கும் பதில்கள் உங்களுக்கு கொடுக்கப் பட்டுள்ள பதில் புத்தகத்தில் கொடுக்கப்பட வேண்டும்.
2. இந்த வினாத்தாளை படிக்க 15 நிமிட நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. வினாத்தாள் மதியம் 02.15 மணிக்கு விநியோகிக்கப்படும். 02.15 மணி முதல் மதியம் 02.30 மணி வரை, மாணவர்கள் வினாத்தாளை மட்டுமே படிக்க வேண்டும். இந்த காலகட்டத்தில் பதில் புத்தகத்தில் பதில் எழுத மாட்டார்கள்.

**பகுதி - அ**

**பிரிவு - அ. தேர்ந்தெடுக்கப்பட்ட பாடப்பகுதி**

**(5 மதிப்பெண் செய்யுள் + 9 மதிப்பெண் உரைநடை = 14 மதிப்பெண்கள்)**

UNNATI
EDUCATIONS
EK KADAM UNNATI KI AUR

1. இரட்சணிய யாத்திரிகம் என்பதன் பொருள் என்ன ? **1**

2. வேதத்தின் உட்பொருளாய் இருப்பவர் யார் ? **1**

3. (அ) ஐங்குறுநூற்றைத் தொகுப்பித்தவர் பெயரைக் கூறுக. **1**

**அல்லது**

(ஆ) மிசை என்றால் என்ன ?

4. (அ) பிரபந்தம் என்னும் வட சொல்லின் பொருள் யாது ? **1**

**அல்லது**

(ஆ) நாயன்மார்கள் நால்வர் பெயர் எழுதுக.

5. (அ) புறாவின் துன்பம் தீர்த்த மன்னன் பெயரினைக் குறிப்பிடுக. **1**

**அல்லது**

(ஆ) மனித வாழ்வை நெறிப்படுத்தும் இலக்கிய வகை எது ?



**UNNATI EDUCATIONS**
**9899436384: 9654-279-279**

**பின்வரும் பத்தியைக் கவனத்துடன் படித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடை அளிக்கவும். (வினா எண் 6 - 7)**

நாம் இன்று பயன்படுத்தும் கடிகாரம், வீடியோ, கேமரா, வாஷிங்மெஷின், பட்டியலிடும் இயந்திரம், அச்சமைப்புக் கருவிகள், போக்குவரத்துச் சாதனங்களான தொடர்வண்டி, பேருந்து, விமானம் போன்றவற்றின் இயக்கங்களைக் கண்காணிக்கும் கட்டுப்படுத்தும் கருவிகள், கட்டிட வடிவமைப்புக் கருவிகள், வங்கிக் கணக்குகளைப் பராமரிப்பது–பணம் வழங்கும் தானியங்கிக் கருவிகள் இப்படியே பட்டியல் நீண்டு கொண்டே போகும் அனைத்திலும் கணிப்பொறிகளே சிறப்பாகப் பங்கு வகிக்கின்றன.

நவீன அன்றாட வாழ்விலேயே கணினியின் பயன்களை நேரில் காண்கிறோம் சிலவற்றை இங்கே நினைவுபடுத்திப் பாருங்கள்.

மருத்துவமனைகளில் நமது அன்புக்குரியவர்களின் சிகிச்சை களுக்காகப் போகிறபோது பல்வேறு மருத்துவப் பரிசோதனைகளின் போது கணினி மூலம் இயங்குகிற கருவிகள் பயன்படுகின்றன.

மருத்துவரின் குறிப்புகள், மருந்துச் சீட்டுகள், அவற்றின் விலைப் பட்டியல்கள், பணம் செலுத்தியதற்கான ஒப்புகைகள் இவையெல்லாம் கணினி மூலமே நம் கைகளுக்குக் கிடைக்கின்றன.

வங்கிகளில் நாம் பணம் செலுத்துகிறோம். அடுத்த சில நிமிடங்களில் நாம் செலுத்திய தொகை நமது கணக்கில் பதிவுசெய்யப்படுகிறது. கடைகளில் நமக்குத் தேவையான பொருள்களை வாங்கிக் கொள்கிறோம் பொருள் ஒவ்வொன்றின் பெயர், அதன் விலை விவரத்தினைப் பதிவாக்கி மொத்தம் செலுத்த வேண்டிய தொகையைக் குறிப்பிட்டு பட்டியல் தரப்படுகிறது. பணம் செலுத்தியதும் ஒப்புகை கிடைக்கிறது கணினியில் அச்சிடப்பட்டு இவை நம் கைகளுக்கு வருகின்றன.

நமது வெளியூர் பயணங்களுக்கான தொடர்வண்டி, பேருந்து, விமான பயணச்சீட்டுகளை முன் பதிவு செய்கிறோம். முன்பெல்லாம் முன்பதிவு நிலையங்களுக்கு நேரில் சென்று நீளமான வரிசைகளில் நின்று பதிவு செய்வோம். இப்போது வீட்டில் இருந்து, அலுவலகத்தில் இருந்து எங்கிருந்து வேண்டுமானாலும் கணினி மூலமே பதிவு செய்து விடுகிறோம். ஆன்லைன் பதிவு என்று நமக்கு இது மிக எளிதாகப் பயன்படுகிறது.

UNNATI EDUCATIONS
EK KADAM UNNATI KI AUR

**6.** பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டனுக்குச் சரியா, தவறா எனக் கண்டறிக : **2×1=2**

(i) மருத்துவப் பரிசோதனைகளில் கணினி மூலம் இயங்கும் கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன.

(ii) கட்டிட வடிவமைப்பில் கணினியின் பயன்பாடு தேவையில்லை.

(iii) பயணச்சீட்டு முன்பதிவு நிலையங்களில் நேரில் சென்று நீளமான வரிசைகளில் நின்று பதிவுசெய்வதில் கணினியின் பயன்பாடு முன்பு உண்டு.

**7.** சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. **1×1=1**

தொடர்வண்டி, பேருந்து போன்றவற்றின் இயக்கங்களைக் கண்காணிக்க உதவுவது.

(அ) செயற்கைக்கோள் (ஆ) கணினி

(இ) கண்காணிப்புக் கேமரா (ஈ) தொடர்புக் கருவிகள்



UNNATI EDUCATIONS
9899436384: 9654-279-279

8. பொருத்துக : 4×1=4

(அ) கி.ரா – மனம் போல் வாழ்வு
(ஆ) ஜெயகாந்தன் – கதவு
(இ) வ.உ.சி – பாஞ்சாலி சபதம்
(ஈ) பாரதி – வேலை கொடுத்தவன்

9. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 1×2=2

(i) வேலை கொடுத்தவன் சிறுகதையின் ஆசிரியர் :
(அ) புதுமைப்பித்தன் (ஆ) ஜெயகாந்தன்
(இ) கி.ரா. (ஈ) தி. ஜானகிராமன்

(ii) கந்தன் எங்கு வேலை செய்தான் ?
(அ) பேட்டை (ஆ) பட்டறை
(இ) டீக்கடை (ஈ) பஜார்

## பிரிவு - ஆ

**பின்வரும் பத்தியைக் கவனத்துடன் படித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்கவும். (வினா எண் 10 - 11)**

மேலாண்மை என்ற வார்த்தைக்கான விளக்கம் நிர்வாகம் செய்வதாகும். ஒரு நிறுவனம், அமைப்பு, அலுவலகம், துறை போன்றவற்றை நிர்வகிப்பது மேலாண்மை எனப்படுகிறது. எவ்வாறு நிர்வகிப்பது என்பதற்கான நுட்பங்களைத் தெரிந்து சிறப்பான முறையில் செயல்பட மேலாண்மை பற்றிய படிப்புகள், பாடங்கள் உதவுகின்றன. மேலாண்மை இயலில் பல்வேறு வகைகள் உள்ளன.

**மேலாண்மை வகைகள் விளக்கம் :**

மேலாண்மை இயலில் பல வகைகள் உள்ளன. ஒவ்வொரு நிறுவனம், துறை, அமைப்பு போன்றவற்றுக்கு ஏற்ப மேலாண்மை வகை மாறுபடும். நிறுவன மேலாண்மை, அலுவலக மேலாண்மை, மனிதவள மேலாண்மை, உற்பத்தி மேலாண்மை, சந்தை மேலாண்மை, நிதி மேலாண்மை, தொழில்நுட்ப மேலாண்மை, ஆராய்ச்சி மேம்பாட்டு மேலாண்மை போன்றவை மேலாண்மை வகைகளில் முக்கியமானவை. நிறுவன மேலாண்மை என்பது ஒரு நிறுவனத்தின் அமைப்பின், துறையின் அனைத்துப் பிரிவுகளையும் ஒட்டுமொத்தமாகக் கொண்டு அனைத்துப் பணிகளையும் நிர்வாகம் செய்வதாகும்.

எந்த ஒரு நிறுவனத்திலும் அமைப்பிலும் அலுவலகம் முக்கியமான இடத்தைப் பிடிக்கிறது. ஒரு நல்ல திறமையான அலுவலகம் இல்லாமல் எந்த நிர்வாகமும் நன்றாகச் செயல்பட முடியாது. மனிதவள மேலாண்மை என்பது ஒரு நிறுவனத்தில் பணிபுரியும் நபர்களை நிர்வாகம் செய்வதாகும். மற்ற நிர்வாகங்களைக் காட்டிலும் இந்த நிர்வாகம் மிகவும் சிக்கலானது. ஒரு நிறுவனத்தின் லாபம், வளர்ச்சி போன்றவை அதன் உற்பத்தியை அடிப்படையாகக் கொண்டே இயங்குகிறது. சிறப்பான உற்பத்தி நடைபெற்றால் மட்டுமே ஒரு நிறுவனம் லாபம் ஈட்ட முடியும். உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களைச் சந்தைப்படுத்துவது அதாவது விற்பனை செய்வது. விற்பனை செய்து பணமாக மாற்றுவது மிக முக்கியமான பணியாகும். சந்தைப்படுத்துதலில் பல காரணிகள், நுட்பங்கள் உள்ளன. அவற்றை முறையாகத் தெரிந்து கொண்டு இயங்க வேண்டும்.



UNNATI EDUCATIONS
9899436384: 9654-279-279

10. பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றனுக்கு விடுபட்ட இடங்களைப் பூர்த்தி செய்க. 3×1=3

(i) மேலாண்மை என்ற வார்த்தைக்கான விளக்கம் __________ செய்வதாகும்.

(ii) மனிதவள மேலாண்மை என்பது __________ நபர்களை நிர்வாகம் செய்வதாகும்.

(iii) நிறுவனத்தின் லாபம் __________ அடிப்படையாகக் கொண்டே இயங்குகிறது.

(iv) உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை __________ முக்கியமான பணி ஆகும்.

11. எவையேனும் மூன்றனுக்குச் சரியான விடையைத் தேர்ந்தெடுக்க. 3×1=3

(i) நிர்வாகத்தின் நுட்பங்களைத் தெரிந்து கொள்ள உதவுவது.

(அ) மேலாண்மை தொடர்பான படிப்புகள்/பாடங்கள்

(ஆ) மேலாண்மை தொடர்பான செய்திகள்

(இ) மேலாண்மை தொடர்பான கருத்துக்கள்

(ஈ) மேலாண்மை தொடர்பான அறிவுரைகள்

(ii) எந்த ஒரு நிறுவனத்திலும் அமைப்பிலும் முக்கியமான இடத்தைப் பெறுவது :

(அ) மனித வளம்

(ஆ) நிதி

(இ) அலுவலகம்

(ஈ) சங்கம்

UNNATI
EDUCATIONS
EK KADAM UNNATI KI AUR

(iii) சிறப்பான உற்பத்தி மூலம் நிறுவனம் பெறக்கூடியது :

(அ) புகழ்

(ஆ) பெயர்

(இ) லாபம்

(ஈ) தகவல்

(iv) மிகவும் சிக்கலான நிர்வாகத்தில் வருவது :

(அ) சந்தை மேலாண்மை

(ஆ) நிறுவன மேலாண்மை

(இ) அலுவலக மேலாண்மை

(ஈ) மனிதவள மேலாண்மை



UNNATI EDUCATIONS
9899436384: 9654-279-279

**பின்வரும் பத்தியைப் படித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடை அளிக்கவும். (வினா எண் 12)**

தற்காலத் தமிழ் இலக்கியங்கள் அச்சேறிய பெருமைக்கு உரியவை. உரைநடை வளர்ச்சி காரணமாக இலக்கியங்களின் வடிவங்களில் மாறுதல்கள் தோன்றின. அவை புதினம், நாடகம், சிறுகதை, கவிதை ஆகியவையாகும். இவ்வகையில் முதலில் தமிழில் தோன்றிய புதினம் பிரதாப முதலியார் சரித்திரம் ஆகும். மேலும், புதினங்கள் வரலாற்றுப் புதினங்கள், சமூகப் புதினங்கள் எனப் பல வகைப்படுத்தப்படுகின்றன. கல்கி எழுதிய பொன்னியின் செல்வன், சிவகாமியின் சபதம், பார்த்திபன் கனவு போன்ற வரலாற்றுப் புதினங்கள் புகழ்பெற்றவை ஆகும்.

சமூகப் புதினங்கள் வரிசையில் குறிஞ்சி மலர், பொன்விலங்கு ஆகியவை பண்பாட்டை மறவாமல் புதுமை படைத்த பெருமைக்குரியவை. நாடக இலக்கியத்தில் தமிழில் படைக்கப்பட்ட முதல் நாடகமாக மனோன்மணியம் விளங்குகிறது. மனோகரா, சபாபதி, வேலைக்காரி, ஓர் இரவு ஆகிய நாடகங்கள் அனைவராலும் சுவைக்கும்படி எழுதப்பெற்றவை ஆகும். சமுதாயத்தில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை எடுத்துக்காட்டி பாமர மக்களின் சிந்தனையைத் தூண்டும் படியாக நாடகங்கள் அமைந்துள்ளன. சிறுகதை இலக்கியத்தில் புதுமைப்பித்தன் கதைகள் அனைவராலும் போற்றப்படும் தன்மை படைத்தவை. கவிதை இலக்கிய வளர்ச்சியில் வரிசையில் மகாகவி பாரதியாரது கவிதைகள் விடுதலை உணர்வைத் தூண்டும் வண்ணம் உணர்ச்சிப் பெருக்குடன் எழுதப்பட்டவை. அவரது பாஞ்சாலி சபதம், பாப்பா பாட்டு, கண்ணன் பாட்டு, குயில் பாட்டு போன்றவை எக்காலத்திலும் நிலைத்து நிற்கும் புகழ்பெற்றவை ஆகும். இவரை அடியொற்றி எழுதிய பாரதிதாசனது கவிதைகள் புதிய சமுதாயம் மலர ஆவல் கொண்டு பாடப்பட்டவை. அவ்வகையில் குடும்ப விளக்கு, இருண்ட வீடு, அழகின் சிரிப்பு, பாண்டியன் பரிசு ஆகிய நூல்கள் இத்தகைய பெருமையுடையவை எனலாம்.

தற்காலத் தமிழ் இலக்கியங்கள் மக்களுக்கு எளிதாகப் புரியும் வகையில் எளிய சொற்களைக் கையாண்டு அவர்களுக்குச் சிறந்த சிந்தனைகளைத் தோற்றுவிக்கும் விதத்தில் எழுதப் பெற்றவை ஆகும்.

**12.** பின்வருவனவற்றுள் எவையேனும் ஐந்தனுக்குச் சரியா, தவறா எனக் கண்டறிக. **5×1=5**

(i) உரைநடை வளர்ச்சி இலக்கியங்களின் வடிவங்களில் மாறுதல்களை ஏற்படுத்தவில்லை.

(ii) புதினங்கள் இரு வகைகளில் மட்டுமே வகைப்படுத்தப்படுகின்றன.

(iii) சமூகப் புதினங்கள் வரிசையில் சிவகாமியின் சபதம் புகழ்பெற்ற புதினமாகும்.

(iv) தமிழில் வெளியான முதல் நாடகம் மனோன்மணியம் என்பதாகும்.

(v) சமுதாய ஏற்றத்தாழ்வுகளை எடுத்துக்காட்டி பாமர மக்களின் சிந்தனையைத் தூண்டுபவையாக நாடகங்கள் உள்ளன.

(vi) பாரதிதாசனின் கவிதைகள் விடுதலை உணர்வை ஊட்டும் வண்ணம் அமைந்திருப்பவை.

(vii) தற்காலத் தமிழிலக்கியங்கள் எளிதில் புரியும் படியாக அமைந்தவைகளாகும்.



UNNATI EDUCATIONS
9899436384: 9654-279-279

13. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றனுக்குச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 1×1=1

(i) ஒரு நிறுவனத்தின் ஒட்டுமொத்த நிர்வாகத்தையும் குறிப்பது :
(அ) அலுவலக மேலாண்மை (ஆ) மனிதவள மேலாண்மை
(இ) சந்தை மேலாண்மை (ஈ) நிறுவன மேலாண்மை

(ii) ஒவ்வொரு நிறுவனத்தின் உயிர்நாடியாகக் கருதப்படும் துறை :
(அ) உற்பத்தித் துறை
(ஆ) நிதித்துறை
(இ) தொழில்நுட்பத்துறை
(ஈ) மனிதவள மேலாண்மைத் துறை

## பிரிவு - இ : இலக்கணம்

14. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றனுக்கு இலக்கணக் குறிப்பு தருக. 1×1=1

(i) முருகன் மனைவி
(ii) தேவியருள்

15. பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றனுக்கு அவை எம்மொழிச் சொற்கள் என்பதைக் கண்டறிந்து எழுதுக. 3×1=3

(i) கம்மி (ii) மகசூல்
(iii) சால்வை (iv) ஓட்டல்

16. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டு கணினிச் சொற்களுக்குத் தமிழில் கலைச் சொற்களை எழுதுக. 2×1=2

(i) Call centre (ii) Agent (iii) E-chating

EK KADAM UNNATI KI AUR

17. பின்வரும் வாக்கியங்களில் எவையேனும் இரண்டனுக்கு அவை பயின்று வரும் அணியினை விளக்குக. 2x1=2

(i) போருழந்து எடுத்த ஆரெயில் நெடுங்கொடி
வாரல் என்பன போல் மறித்துதக் கைகாட்ட (சிலம்பு)
(ii) பால் நிலவு
(iii) மதிமுகம்
(iv) புலிப் பாய்ச்சல்

18. பின்வரும் வினாக்களில் ஏதேனும் ஒன்றுக்கு விடை அளிக்கவும். 1x1=1

(i) வேற்றுமை உருபுகள் யாவை ?
(ii) உடம்படுமெய் என்றால் என்ன ?



UNNATI EDUCATIONS
9899436384: 9654-279-279

## பிரிவு - ஈ

**பின்வரும் பத்தியைக் கவனத்துடன் படித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடை அளிக்கவும். (வினா எண் 19 - 20)**

நாடு, மொழி, இனம் கடந்த நிலையில் அனைவரும் ஏற்கும் பொதுமைப் பண்பு கொண்டு செவ்வியல் மொழி இருக்க வேண்டும் என்று மொழி அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். தமிழ் மொழியில் உள்ள இலக்கணக் கோட்பாடுகள் அனைவரும் ஏற்கும் பொதுமைப்பண்பு கொண்டுள்ளன. காதல் வாழ்வைப் பற்றிக் கூறும் அகநெறி இன்னார்க்குரியது என்று கூறாமல் பொதுவாக அனைவருக்கும் உரியது என்று கூறுவது தமிழ் அகரமாகும். இன்னார்க்கு உரியது என்று கூறும் பொழுது அது அகமரபாகக் கருதாமல் புறமரபாகக் கருதப்படும்.

இதுபோல் உலகம் நமது. உலக மக்கள் நம் உறவினர் என்கிற நிலையில் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற பொதுமைச் சிந்தனையை நம் இலக்கியம் குறிப்பிடுகிறது. தமிழர்கள் உலகம் தழீஇய பொதுமைப் பண்பு உடையவர்களாகத் திகழ்ந்தனர். இலக்கியங்கள் இப்பண்புகளை எடுத்துரைக்கின்றன.

துலாக்கோல் நடுநிலையோடு பொருள்களை அளவிடுதல் போல் உலக மக்களை உறவினர், பகையாளி என்று கருதாமல் நடுநிலையோடு சான்றோர்கள் உறவு கொள்வர். சமநிலையில் எல்லோரையும் மதிக்கும் பண்புடையவர்களாகச் சான்றோர்கள் விளங்குவர். சங்க இலக்கியங் களில் கூறப்பட்ட செய்திகள் அனைத்தும் ஒரே ஒரு குறிப்பிட்ட சாரருக்கோ, இனத்தார்கோ, நாட்டினருக்கோ, மொழியினருக்கோ என்று கூறாமல் மனித இனத்தார் அனைவருக்கும் கூறப்பட்டனவாக உள்ளன. மனித இன முன்னேற்றத்திற்காகக் கூறப்பட்டனவாக உள்ளன. மனித வாழ்க்கையில் ஒருவன் முன்னேறி தெய்வ நிலையை அடையலாம் என்று கூறுகின்றன. நடுநிலையோடு அரசாட்சி செய்த மனுநீதிச் சோழன் வரலாற்றை நம் இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

EDUCATIONS
EK KADAM UNNATI KI AUR

**19.** சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. **3x1=3**

(i) தமிழ் மொழியில் உள்ள இலக்கணக் கோட்பாடுகள் :
- (அ) வளம் கொண்டுள்ளன
- (ஆ) சிறப்பு கொண்டுள்ளன
- (இ) பொதுமைப் பண்பு கொண்டுள்ளன
- (ஈ) செறிவு கொண்டுள்ளன

(ii) காதல் வாழ்வைப் பற்றிக் கூறுவது :
- (அ) அகநெறி (ஆ) புறநெறி
- (இ) கற்பு நெறி (ஈ) அகப்புறநெறி

(iii) நடுநிலையோடு அரசாட்சி செய்து நீதி வழஙகிய மன்னன் :
- (அ) ராஜராஜ சோழன் (ஆ) குலோத்துங்கச் சோழன்
- (இ) ராஜேந்திரச் சோழன் (ஈ) மனுநீதிச் சோழன்

**20.** பின்வரும் வினாக்களில் ஏதேனும் ஒன்றனுக்கு விடை அளிக்கவும். **1x1=1**

(i) __________ என்ற பொதுமைச் சிந்தனையை நம் இலக்கியம் குறிப்பிடுகிறது.

(ii) சமநிலையில் எல்லோரையும் மதிக்கும் பண்புடையாளர்களாக விளங்குபவர்கள் __________ ஆவர்.



UNNATI EDUCATIONS
9899436384: 9654-279-279

21. பின்வருவனவற்றுள் எவையேனும் நான்கனுக்குச் சரியா தவறா எனக் கண்டறிக. **4x1=4**

(i) சிதம்பரனாருக்கு 23 –ஆம் வயதில் திருமணம் நடைபெற்றது.

(ii) வ.உ. சிதம்பரனார் 1906–ஆம் ஆண்டு சுதேசி கப்பல் வணிகத்தைத் தொடங்கினார்.

(iii) வ.உ. சிதம்பரனாருக்கு 40 ஆண்டுகள் ஆயுள் தண்டனை விதிக்கப் பட்டது.

(iv) வ.உ. சிதம்பரனார் தமிழ் மீது ஆர்வம் கொண்டிருக்கவில்லை.

(v) காந்தியின் ஒத்துழையாமை இயக்கத்தை வ.உ.சி ஏற்றார்.

(vi) தேசபக்தர் சுப்பிரமணிய சிவாவும் வ.உ.சி யோடு கைது செய்யப் பட்டவர் ஆவார்.

(vii) வ.உ.சி கப்பல் போக்குவரத்துத் துறையில் மட்டுமே கவனம் செலுத்தினார்.

22. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டனுக்கு விடுபட்ட இடங்களை நிரப்புக. **2x1=2**

(i) தமிழ் மொழியின் தொன்மையான இலக்கணம் __________ ஆகும்.

(ii) பாட்டும் தொகையும் எனப்படுபவை __________.

(iii) திருத்தக்கதேவர் படைத்த நூல் __________ ஆகும்.

(iv) தமிழில் தோன்றிய முதல் புதினம் __________.

## பகுதி - ஆ
## பிரிவு - அ

**(செய்யுள் 5 மதிப்பெண் + உரைநடை 6 மதிப்பெண் = 11 மதிப்பெண்)**

23. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றனுக்கு 20 முதல் 25 சொற்களில் விடையளிக்கவும். **1x2=2**

(i) எவை தாயைப் பெரும் பித்தி ஆக்குகின்றன ?

(ii) நெடும்புனல், அடும்புனல் பொருள் தருக.

EK KADAM UNNATI KI AUR

24. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றனுக்கு 40 முதல் 45 சொற்களில் விடை அளிக்கவும். **1x3=3**

(i) அடியவர் காட்டும் அன்பைப் பற்றி மாணிக்கவாசகர் கூறும் கருத்துகளைக் கூறுக.

(ii) ஆண்டாளின் வரலாற்றை விளக்கிக் கூறுக.

25. பின்வரும் வினாக்களுக்கு 20 முதல் 30 சொற்களில் விடையளிக்க. **1x2=2**

(i) தமிழகத்தின் தனித்தன்மையைப் பற்றி விவரிக்க.

26. (i) நாட்டுப்புற இசையின் சிறப்புகளை விவரித்துரைக்க. **1x2=2**

**அல்லது**

(ii) ஆடற்கலை வளர்த்த பெண்களுள் மும்மூர்த்திகள் எனப்படுபவர் யாவர் ? அவர்களைப் பற்றிக் கூறுக.

27. (i) சங்ககாலத்தில் தோன்றிய இலக்கியங்களின் சிறப்புகளை எழுதுக. **1x2=2**

**அல்லது**

(ii) இலக்கிய வடிவங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் குறித்து எழுதுக.



UNNATI EDUCATIONS
9899436384: 9654-279-279

## பிரிவு – ஆ

**பின்வரும் பத்தியைக் கவனத்துடன் படித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடை அளிக்கவும். (வினா எண் 28 - 29)**

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோர் பாடிய பாடல்களின் தொகுப்பு தேவாரம் என அழைக்கப்படுகிறது. முதல் மூன்று திருமுறைகள் சம்பந்தராலும் நான்கு, ஐந்து, ஆறாம் திருமுறைகள் அப்பராலும் ஏழாம் திருமுறை சுந்தரராலும் பாடப்பட்டவை ஆகும். எட்டாம் திருமுறையான திருவாசகமும் திருக்கோவையாரும் மாணிக்கவாசகரால் பாடப்பட்ட பெருமையுடையன. "திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்" என்ற தொடர் மூலம் இதன் பெருமையை உணரலாம்.

ஒன்பதாம் திருமுறையாகத் திருவிசைப்பா மற்றும் திருப்பல்லாண்டு ஆகியவை உள்ளன. பத்தாம் திருமுறையாகத் திருமூலர் இயற்றிய திருமந்திரம் அமைந்துள்ளது. பதினோராம் திருமுறையாகக் காரைக்கால் அம்மையார், பட்டினத்தார், நக்கீரர் உள்ளிட்ட பன்னிருவர் பாடிய பாடல்கள் விளங்குகின்றன. பல்வேறு காலங்களில் தோன்றிய நூல்கள் இத்திருமுறையில் அடங்கியுள்ள விதம் இதன் சிறப்பாகக் கருதப்படு கிறது. 12 –ஆம் திருமறையாகச் சேக்கிழார் இயற்றிய பெரிய புராணம் உள்ளது. இந்நூலுக்குத் திருத்தொண்டர் புராணம் என்ற சிறப்புப் பெயரும் உண்டு. இந்நூல் சைவ சமய அடியார்களது வரலாற்றையும் பெருமையையும் உலகுக்கு உணர்த்தும் விதத்தில் இயற்றப்பட்டுள்ளன.

வைணவச் சமய இலக்கியங்களாக நாலாயிர திவ்யப் பிரபந்தம் உள்ளது. பன்னிரு ஆழ்வார்கள் பாடிய இப்பாடல் தொகுப்பு தமிழ் வேதம் எனவும் அழைக்கப்படுகின்றது. ஆழ்வார்களுள் பெரியாழ்வார் பாடிய திருப்பல்லாண்டு, ஆண்டாள் பாடிய திருப்பாவை, நம்மாழ்வார் பாடி அருளிய திருவாய்மொழி, ஆண்டாள் பாடிய நாச்சியார் திருமொழி, முதலாழ்வார்களான பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் பாடியவை, திருமங்கையாழ்வார், தொண்டரடிப்பொடியாழ்வார், மதுரகவி யாழ்வார் போன்றோர் பாடியவைகள் இத்தொகுப்பில் உள. இவ்வகையான பக்தி இலக்கியங்கள் மக்களிடம் சமயக் கருத்துக்களைப் பரப்பி நெறி மாறாத வாழ்வில் ஈடுபட வழி வகுத்தன.

UNNATI EDUCATIONS EK KADAM UNNATI KI AUR

**28.** தேவாரம் பாடியோர் யாவர் ? **2**

**29.** (i) திருவாசகம் பாடியவர் மற்றும் அதன் சிறப்பினைக் கூறுக. **2**

**அல்லது**

(ii) முதல் ஆழ்வார்கள் எனப்படுவோர் யாவர் ?

**பின்வரும் பத்தியைக் கவனத்துடன் படித்து கேட்கப்படும் வினாக்களுக்கு விடையளிக்கவும். (30 - 32)**

வரலாற்றுச் சின்னங்கள் மனிதரின் அறிவுப் பரப்பை அகலப்படுத்தும் ஆற்றல் கொண்டவை. அந்தச் சின்னம் அமைந்த இடங்களில் காணலாகும் சிறப்புகள் நம் பொது அறிவை வளர்ப்பதோடு நம் நெஞ்சில் அமைதியும் உற்சாகமும் நிலவ வழி ஏற்படுத்துபவை. சமயம் சார்ந்த வரலாற்றுச் சின்னங்களில் குறிப்பிடத்தக்க தனித்தன்மை வாய்ந்தது தாராசுரம் ஐராதீஸ்வரர் கோயில் ஆகும்.



UNNATI EDUCATIONS
9899436384: 9654-279-279

ஐராவதம் என்னும் தேவருலக யானை இத்தலத்தில் ஈசனைப் பூசித்துச் சிவப்பேறு அடைந்ததாம். அதனால், இத்திருக்கோவில் ஐராதீஸ்வரம் எனப் பெயர் பெற்றதாகத் தாராசுரம் மான்மியம் என்னும் நூல் குறிப்பிடுகிறது.

இத்திருக்கோயிலைத்தான் அண்மையில் யுனெஸ்கோ நிறுவனம் உலக மரபுச் சின்னம் என்ற தகுதியை அளித்துக் கௌரவப்படுத்தியுள்ளது. இக்கோயிலினுள் நுழைந்து திருச்சுற்றை ஒருமுறை வலம் வந்தால் வான்மண்டலத்தில் ஏதோ ஒரு புதிய கிரகத்திற்குச் சென்று வந்த அற்புத உணர்வு ஏற்படும்.

தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த கும்பகோணத்திற்குத் தென் மேற்கில் அரலாற்றின் தென்கரையில் அமைந்துள்ளது தாராசுரம். சோழப் பேரரசர்கள் காலத்தில் இராசபுரம் என்று அழைக்கப்பெற்ற இவ்வூர், காலப்போக்கில் இராராபுரம் என்றும் தாராபுரம் என்றும் மருவி தற்காலத்தில் தாராசுரம் என்று அழைக்கப்படுகிறது.

**30.** (i) வரலாற்றுச் சின்னங்களின் முக்கியத்துவம் யாது ? **2**

**அல்லது**

(ii) தாராசுரம் கோயிலின் தொன்மம் என்ன ?

**31.** தாராசுரம் கோயில் பெற்ற கௌரவம் யாது ? **2**

**32.** தாராசுரம் கோயிலின் தனித்துவத்தைக் கூறுக. **2**

**33.** கல்வியின் சிறப்புகளைத் தொகுத்து எழுதுக. **3**

## பிரிவு - இ

**34.** பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றனுக்குச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. **1x2=2**

(i) மேலாண்மை என்பது ஓர் __________ ஆகும்.

(அ) தொழில்துறை (ஆ) கலைத்துறை
(இ) நிர்வாகத்துறை (ஈ) அறிவுத்துறை

(ii) மாதவி கோவலனுக்கு எழுதிய கடிதம் எதில் எழுதப்பட்டது ?

(அ) ஓலை (ஆ) பனை ஓலை
(இ) தாழை மடல் (ஈ) காகிதம்

**35.** பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றுக்குச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. **1x2=2**

(i) கம்மி என்பது __________ மொழிச்சொல்.

(அ) மலையாளம் (ஆ) தமிழ்
(இ) உருது (ஈ) கிரேக்கம்

(ii) இலாகா என்பது __________ மொழிச்சொல்.

(அ) அரபு (ஆ) உருது
(இ) வடமொழி (ஈ) தமிழ்

**36.** பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றனுக்கு விடை அளிக்க. **1x2=2**

(i) பிறிது மொழிதல் அணி பற்றிக் கூறுக.

(ii) தமிழரின் ஐவகை நிலங்கள் யாவை ?

## பிரிவு - ஈ

**37.** பின்வரும் வினாவிற்கு விளக்கமாக விடையளிக்கவும். **1x3=3**

காலம் அறிதலின் தேவையை விளக்குக.



UNNATI EDUCATIONS
9899436384: 9654-279-279